# வெற்றிடங்கள்

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமைகளைப் பூர்த்தி செய்யும் சிறந்த உடல் ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தையுடன் கூடிய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | உதவிப் பணிப்பாளர் | 01 |
| 02. | கணக்கு உத்தியோகத்தர் | 01 |
| 03. | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/ஆங்கிலம்) | 03 |
| 04. | முகாமைத்துவ உதவியாளர் | 03 |

### 01. உதவிப் பணிப்பாளர்

**1.1 தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து மனித வள முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், சட்டம் அல்லது பதவிக்கு ஏற்புடைய பாடத் துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பதவிக்கு ஏற்புடைய பாடத் துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

I. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

II. ''கனிஷ்ட முகாமையாளர்'' (JM) சேவை வகுதியின் ஏற்புடைய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

### 02. கணக்கு உத்தியோகத்தர்

**2.1 தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகள் 1 அல்லது 2)**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீடு, நிதி, வணிகம், வியாபார நிர்வாகம், அரச முகாமைத்துவப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு ஏற்புடைய பாடத் துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

II. பதவிக்கு ஏற்புடைய பாடத் துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்வாண்மையான நிறுவனம் ஒன்றில் உள்வாரியாக இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகள் 1 அல்லது 2)**

I. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

II. "முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் அல்லாத" (MA 1-2), (MA 5-2) சேவை வகுதியின் II ஆம் தரத்தின் ஏற்புடைய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

### 03. மொழிபெயர்ப்பாளர்

**3.1 தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**I. மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பு குறித்த பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**II. மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பு குறித்த பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**III. மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பு குறித்த பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

I. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

### 04. முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம் அல்லாத)

**4.1 தகைமைகள் (கட்டாய பொதுத் தகைமைகள்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

I. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களுக்குத் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

II. கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (பொதுச் சாதாரணப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

III. பதவிக்குத் தேவையான ஏனைய தகைமைகள்

கணனி சொல் செயலாக்கம்/ தட்டெழுத்து குறித்து மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் 06 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சி அற்ற, அரைத் தேர்ச்சி மற்றும் தேர்ச்சி பெற்ற சேவை வகுதிகளின் பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'உ' ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களுக்குத் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) கணனி சொல் செயலாக்கம்/ தட்டெழுத்து குறித்து மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் 06 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல்.

(ஈ) சேவையில் நிரந்தர நியமனங்களை வகித்தல் வேண்டும் என்பதுடன், குறித்த நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) உரிய திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனமொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**பொதுத் தகவல்கள்**

**1. வயதெல்லை**

1.1 உதவிப் பணிப்பாளர், கணக்கு உத்தியோகத்தர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் 2026.04.02 ஆம் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

1.2 முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் 2026.04.02 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**2. ஒவ்வொரு விண்ணப்பதாரியும்**

2.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.2. பதவிக்குக் கையளிக்கப்படும் பணியை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3. நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**3. சம்பள அளவுத்திட்டம்**

3.1 உதவிப் பணிப்பாளர் MM 1-1 - 2025 ரூ. (91,690-10×2,480 -15×3,450- 168,240)

3.2 கணக்கு உத்தியோகத்தர் JM 1-1 - 2025 ரூ. (72,650-10×1,360-18×2,040-122,970)

3.3 மொழிபெயர்ப்பாளர் MA 4 -2025 - ரூ. (64,320-10×1,360-15×1,670-5×2,040-113,170)

3.4 முகாமைத்துவ உதவியாளர் MA 1-2-2025 - ரூ. (46,220-10×540-7×630-12×1,080-12×1,280-84,350)

இந்தப் பதவிகள் நிரந்தர பதவிகளாகும். நியமனதாரிகள் ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும். தொழில் தருநரிடமிருந்து 12% ஆகும். ஊழியரிடமிருந்து 8% ஆகும். ஆணைக்குழுவினால் நியமனதாரியின் சம்பளத்தில் 3% இற்கு சமமான தொகையொன்று ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்குச் செலுத்தப்படும்.

பதவியொன்றிற்கு நியமனம் பெறும் ஒருவர் 03 வருட தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்படுவார். அவரது சேவை வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருப்பின் மற்றும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் தகுதிகாண் நிலைக் காலத்தின் இறுதியில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

அரச ஊழியர்கள் மாகாண அரச சேவையிலும் நியதிச்சட்ட சபைகளிலும் கூட்டுத்தாபனங்களிலும் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவங்களை ஏற்புடைய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். தகைமைகளுடன் கூடிய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு மற்றும்/அல்லது எழுத்துப் பரீட்சையொன்றிற்கு ஏற்புடையவாறு அழைக்கப்படுவதுடன், குறித்த நேர்முகப் பரீட்சையின் மற்றும்/அல்லது எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பப்படிவங்கள்**

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2026.04.02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் ''தவிசாளர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, 09 ஆம் மாடி, ஜனஜயசிட்டி கட்டடத் தொகுதி, நாவல வீதி, இராஜகிரிய'' எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஏற்புடைய பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

இந் நியதிகளுக்கு அமைவாகக் காணப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் 2026.04.02 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த ஆணைக்குழு அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். இது தொடர்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**தவிசாளர்**
**அரசகரும மொழிகள் ஆணைக்குழு,**
**09 ஆம் மாடி**
**ஜனஜயசிட்டி கட்டடத் தொகுதி,**
**நாவல வீதி,**
**இராஜகிரிய**
**2026.03.19 ஆம் திகதி**

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

........................................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. விண்ணப்பதாரியின் பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் ( உ-ம் : SILVA C.B) ........................................

1.2 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ........................................

1.3 முழுப் பெயர் ( தமிழில் ) : ........................................

2. முகவரி :

2.1 நிரந்தர முகவரி : ........................................

2.2 அலுவலக முகவரி (இருப்பின்) : ........................................

2.3 தொலைபேசி இலக்கம் : ( அலுவலக ) ........................ தனிப்பட்ட ........................

3. பால் : ☐ ஆண் 01
பெண் 02 (உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதுக)

4 வயது (பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.)

4.1 பிறந்த திகதி :
வருடங்கள் : ☐ மாதங்கள் : ☐ நாட்கள் : ☐

4.2 2026/ 04/02 ஆம் திகதியன்று வயது :
வருடங்கள் : ☐ மாதங்கள் : ☐ நாட்கள் : ☐

4. திருமணமானவர் / திருமணமாகாதவர் : ........................
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ........................
6. குடியுரிமை : ........................
7. மொழிமூலம் : சிங்களம் : ☐
தமிழ் : ☐

8. தகைமைகள் ( சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.)

I. க.பொ.த. ( சா/த) வருடம் ........................................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

II. க.பொ.த. ( உ/த) வருடம் ........................................

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

III. பெற்றுக் கொண்டுள்ள பட்டம் (பட்டச் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.)

| பெற்றுக் கொண்டுள்ள பட்டத்தின் பெயர் | பல்கலைக்கழகம் | திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

IV. பூர்த்தி செய்துள்ள தொழில்சார் மற்றும் வேறு பாடநெறிகள் : (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.)

| பாடநெறியின் பெயர் | பாடநெறியை நடாத்திய நிறுவனத்தின் பெயர் | கால எல்லை |
|---|---|---|
| | | |

9. அனுபவம் :

| பதவி | நிறுவனத்தின் பெயர் | சேவைக் காலம் | வெறிதாக்கலுக்கான காரணம் |
|---|---|---|---|
| | | | |

10. மொழித் திறன் குறித்த விபரங்கள் : ........................................

11. நீங்கள் ஏதேனும் ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
ஆம்/ இல்லை
(ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுக) ........................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு உள்ளடங்கியுள்ள ஏதேனுமொரு தகவல் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது என்பது நியமனத்திற்கு முன்னர் வெளிப்பட்டால் நான் தகைமையற்றவர் ஆக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும், குறித்த குற்றமானது நியமனத்தின் பின்னர் வெளிப்பட்டால் பதவி நீக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

........................ ........................
**திகதி** **விண்ணப்பதாரியின் ஒப்பம்**

அரசாங்க திணைக்களங்கள் / அமைச்சுக்கள் / அதிகாரசபைகளின் தலைவரின் சான்றுரை

........................................ ஆக இந்தத் திணைக்களத்தில் / அமைச்சில் / கூட்டுத்தாபனத்தில் / அதிகாரசபையில் / மாகாண சபையில் சேவையாற்றுகின்ற திரு/திருமதி/செல்வி ........................ அவர்களின் விண்ணப்பப்படிவத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். அவரது சேவை மற்றும் நடத்தை திருப்திகரமானது / திருப்தியற்றது. அவர் இப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிப்பது தொடர்பில் நான் பரிசீலனை செய்வேன்.

திணைக்களத்தின் / அமைச்சின் / கூட்டுத்தாபனத்தின் / மாகாண சபை தலைவரது ஒப்பம் :

பெயர் : ........................................
பதவி : ........................................
முகவரி : ........................................
திகதி : ........................................